Before the Court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Kanyakumari District at Nagercoil

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348004

1. District : மாவட்டம் Kanyakumari PS: காவல்நிலையம் V&AC Kanyakumari Year: ஆண்டு 2025 FIR No. முத.அ. எண் 04/2025 Date: நாள் 09.05.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 06.05.2025 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் 20.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.05.2025 Time : நேரம் 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி Accused house About 10 Km South West
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.A.Sree Padmanaban
(b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் Tr.Ananjaperumal Nadar
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1954
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Retired Teacher
(g) Address : முகவரி D.No.4/47, Melatheru, Rajakamangalam Post, Agastheeswaram Taluk, Kanyakumari District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Mohammed Ajmal Khan, Sub-Inspector of Survey, Rajakamangalam Firka, Agastheeswaram Taluk, Kanyakumari District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் C.Sivasankari, பதவி Inspector நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

09-05-2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.05.2025 10:20 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T.T.REMA.....
Rank: நிலை Inspector, V&AC, Kanyakumari .....No. எண் .....

Attachment to column No-12 of FIR in Kanyakumari Vigilance and Anti-Corruption Cr.No.04/2025

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:- இன்று 09.05.2025 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு காவல் ஆய்வாளர் TT.ரெமா ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்தபோது கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் தாலுகா ராஜாக்கமங்கலம் அஞ்சல் கதவு எண் 4/47 மேலதெரு என்ற முகவரியில் வசித்து வரும் அனஞ்சபெருமாள் மகன் திரு.A.ஸ்ரீ பத்மநாபன் என்பவர் என்முன் ஆஜராகி அளித்த புகார் மனுவினை பெற்று மேற்படி புகார்தாரர் மற்றும் புகாரில் குறிப்பிடப்பட்டிருந்த எதிரியின் முன்நடத்தைகள் குறித்து எனது ரகசிய தொடர்பாளர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு மேற்படி புகார் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அலைபேசி மூலமாக தகவல் தெரிவித்து வாய்மொழி உத்தரவு பெற்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கன்னியாகுமரி பிரிவு குற்ற எண் 04/2025 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 ஆக இன்று 09.05.2025-ம் தேதி காலை 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன் மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் A.ஸ்ரீ பத்மநாபன் வயது 71, த/பெ.அணஞ்சபெருமாள் நாடார், 4/47 மேலதெரு, ராஜாக்கமங்கலம் அஞ்சல், அகஸ்தீஸ்வரம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி மாவட்டம். அய்யா, நான் கன்னியாகுமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் என்னும் ஊரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஆசிரியராக பணியாற்றி தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டம் நீண்டகரை B கிராமம் சர்வே எண் 497/13 ல் சுமார் 11 சென்ட் விளைநிலம் எனது மனைவி இந்திரா பெயரில் உள்ளது. மேற்படி விளைநிலத்திற்கு புல எல்கையினை அளந்து தர வேண்டி நான் 07.11.2024 ஆம் தேதி ராஜாக்கமங்கலத்திலுள்ள இ-சேவை மையத்தின் மூலம் எனது மனைவி பெயரில் விண்ணப்பித்திருந்தேன். இது தொடர்பாக நான் ரூ.860/- கட்டணமும் செலுத்தி ரசீதும் பெற்றிருந்தேன். எனது விண்ணப்பம் தொடர்பாக நீண்டகரை B கிராமம் சர்வே எண் 497/13 ற்கு புல எல்கையினை நிர்ணயம் செய்ய வேண்டி இருப்பதால் 09.05.2025 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்கு மேற்படி புல எண் உள்ள இடத்தில் ஆஜராகும்படி Sub Inspector of Survey, Rajakamangalam Firka Agasteeswaram Taluk Kanyakumari District என்பவரிடமிருந்து 28.04.2025 தேதியிட்ட கடிதம் வந்தது. இது தொடர்பாக 02.05.2025 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டிருந்த எனது வீட்டருகே குடியிருக்கும் திரு.முகமது அஜ்மல் கான் Sub Inspector of Survey, Rajakamangalam Firka என்பவரை அவரது வீட்டிற்கு சென்று பார்த்து மேற்படி கடிதம் தொடர்பாக கேட்ட போது எனக்கு இப்போது வேலை இருக்கிறது தாங்கள் 06.05.2025 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு இங்கு வாருங்கள் என்று கூறியதால் நான் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். பின்னர் 06.05.2025 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு திரு.முகமது அஜ்மல் கான் அவர்களை அவர் கூறியவாறு அவரது வீட்டில் சந்தித்த போது மேற்படி இடத்திற்கு புல எல்கையினை நிர்ணயம் செய்ய கொஞ்சம் செலவாகும் என்று தெரிவித்தார். அதற்கு நான் ஏற்கனவே ரூ.860/- கட்டணமாக செலுத்திவிட்டேனே என்று கூறினேன். அதற்கு அவர் மேற்படி இடத்தை அளந்த பிறகு F-line சான்று வழங்குவதற்கு தனக்கு ரூ.2000/- தர வேண்டும். அதை மேற்படி இடத்தை 09.05.2025 ஆம் தேதி அளந்த பிறகு தன்னிடமோ அல்லது தான் சொல்லும் நபரிடமோ தர வேண்டும் என்றும் கூறினார். அப்போது அவரிடம் சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். வீட்டில் வந்து யோசித்து பார்த்தபோது எனக்கு லஞ்சம் கொடுத்து எனது இடத்திற்கு புல எல்கையினை நிர்ணயம் செய்து F-Line சான்று பெற விருப்பம் இல்லாததால் வீட்டு செலவுக்கு வைத்திருந்த ரூ.2000/-த்தை எடுத்துக்கொண்டு என்னிடம் லஞ்சம் கேட்ட திரு.முகமது அஜ்மல் கான் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி

கேட்டு ஒரு புகார் மனு தயார் செய்து கொண்டு வந்துள்ளேன். மேற்படி இடத்திற்கு புல எல்கையினை நிர்ணயம் செய்ய விண்ணப்பித்த ஒப்புகை சீட்டு மற்றும் எனக்கு திரு.முகமது அஜ்மல் கான் 28.04.2025 தேதியிட்டு அனுப்பிய நோட்டீஸ் நகல் ஆகியவற்றை தங்களிடம் இந்த புகார் மனுவுடன் இணைத்து வழங்குகிறேன். இப்படிக்கு sd 09-05-2025. Sir received the complaint on 09.05.2025 at 08.30 hrs. Genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complaint. Since the registration of Regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Kanyakumari V&AC Cr.No.04/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 09.05.2025 at 09.30 hrs and took up for investigation. sd. Ins 09/05/2025 Inspector, V & AC, Nagercoil

இந்த அசல் முதல் தகவலறிக்கையை வாதியின் புகார் மனு மற்றும் ஆவணங்களோடு இணைத்து கனம் முதன்மை குற்றவியல் நடுவர் மற்றும் தன் நீதிபதி கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை நான் விசாரணைக்கு எடுத்து கொண்டேன்

09/05/2025
Inspector of Police
V&AC, Nagercoil.